IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.383/2009
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 03.10 PM.

பி.வா.சா. 1 சாட்சி ராவுத்தன் த.பெ.கொண்டப்பன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 27.01.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :

1. மேற்படி அ.வ.எண்.383/2009 மற்றும் அதனுடன் சேர்தினையாக விசாரணை செய்யப்படும் அ.வ.எண்.499/2009 ஆகிய 2 வழக்குகளுக்கும் சேர்த்து நான் பிரதிவாதி தரப்பில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண். 383/2009 என்ற வழக்கு கொண்டப்பன் தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான். அ.வ.எண். 499/2009 என்ற வழக்கு நானும் எனது சகோதரரும் சேர்ந்து தாக்கல் செய்த வழக்கு என்றால் சரிதான்.

2. அ.வ.எண். 499/2009 என்ற வழக்கில் சொத்து விபரம் என்ன என்றால் சர்வே எண். 248, விஸ்தீரணம் கிழமேலாக 39 அடியும், தென்வடல் 18 அடியும் ஆகும். மேற்படி சொத்து யார் யாருக்கு பாத்தியம் என்றால் எனது தம்பி அம்மாவாசி என்ற ஆறுமுகம், முத்துவேல் ஆகியோருக்கு பாத்தியம் ஆகும். மேற்படி சொத்தை மேற்படி 2 பேரும் பாகம் பிரித்துக்கொண்டார்களா என்றால் பிரித்துக்கொண்டார்கள்.

3. ஆறுமுத்திற்கு எந்த பக்கம் என்றால் கிழக்கேயும், முத்துவேலுக்கு மேற்கேயும் பாகம் பிரிக்கப்பட்டது. முத்துவேலுக்கு ஒதுக்கப்பட்ட பாகம் எவ்வளவு என்றால் முத்துவேலுக்கு 39 அடியில் 24 அடி ஒதுக்கப்பட்டது.

மீதமுள்ளது ஆறுமுகத்திற்கு ஒதுக்கப்பட்டது. மேற்படி சொத்தில் தென்வடல் 18 அடியை அனுபவம் செய்து வந்தனர். மேற்படி பிரித்துக்கொண்டு தனித்தனியாக வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4. ஆனால் மொத்த சொத்தையும் சேர்த்து கொண்டப்பன் மீது நாங்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் முத்துவேல் வாதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கில் ஆறுமுகம் என்ற அம்மாவாசி என்பவர்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆறுமுகம் என்ற அம்மாவாசி என்பவர் மொத்த சொத்திற்கும் வழக்கு தாக்கல் செய்வதற்கு உரிமையில்லை என்றால் சரிதான்.

5. ஆறுமுகம் என்ற அம்மாவாசி தாவா சொத்து முழுமைக்கும் வழக்கு தாக்கல் செய்தது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கு சொத்தில் எனக்கு உரிமையில்லை என்றால் வழக்கு சொத்து நடைபாதையாகும். மேற்படி நடைபாதையில் எனக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. மேற்படி நடைபாதை எனக்கு பாத்தியப்பட்டது என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

6. மேற்படி வழக்கில் அரசாங்கத்தை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு எண். 499/2009 ல் உள்ள பிரதிவாதிக்கும் நடைபாதையில் அனுபவம் செய்ய உரிமை உள்ளது என்றால் சரிதான். நான் கோரியுள்ள பரிகாரம் எனது அனுபவத்தை நிரந்தரமாக இடைஞ்சல் செய்யக்கூடாது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நடைபாதையில்

எங்களுக்கு உள்ள பொது அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

7. தாவா அசல் வழக்கு எண். 499/2009 வழக்கில் உள்ள 39x18 கொண்ட அளவு உள்ள சொத்து எங்களுக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எந்த வருடம் யார் யார் வாங்கினார்கள் என்றால் 1964 அல்லது 1965 என்று எனக்கு ஞாபகம் இல்லை. எனது தகப்பனாருக்கு கிரைய சொத்து. மேற்படி சொத்திற்கு எந்த பக்கம் அரசாங்கத்தின் நடைபாதை உள்ளது என்றால் தெற்கே உள்ளது. மேற்படி சொத்தில் தெற்கே பொது நடைபாதை உள்ளதாக எனது தந்தையின் கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. மேற்படி கிரைய பத்திரத்தில் நான்குமாலில் பொது நடைபாதை குறிப்பிட்டுள்ளதால்தான் அசல் வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 7 ஆவணத்தில் சொத்து விபரத்தில் பிரச்சனையில் உள்ள பொது நடைபாதையை காண்பிக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ. 7 ல் உள்ள சொத்திற்கு தெற்கு நான்குமால் என்ன என்றால் ஞாபகம் இல்லை.

9. மேற்படி பொது நடைபாதையின் அகலம் என்ன என்றால் 5 அடி ஆகும். மேற்படி 5 அடி குறித்து எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை. மேற்படி 5 அடி பொது நடைபாதை பி.வா.சா.ஆ. 7 ல் கண்டுள்ள சொத்தில் கட்டுப்பட்டு வருகிறது என்றால் சரிதான். மேற்படி விபரத்தை எனது வழக்கறிஞரிடம் கூறி பிராதில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை.

10. மேற்படி வழக்கு தாக்கல் செய்ய வழக்கறிஞரிடம் விபரம் சொன்னது யார் என்றால் நான்தான் சொன்னேன். எனது கிரைய சொத்திற்கு தனி பட்டா, தனி சர்வே எண் என்றால் சரிதான். சர்வே எண் எனக்கு ஞாபகம் இல்லை. பி.வா.சா.ஆ7 ல் உள்ள சொத்திற்கு தெற்கே உள்ள சொத்துதான் கொண்டப்பன் சொத்து என்று அ.வ.எண். 383/2009 ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி வழக்கு சொத்து பொறுத்து நான் விளம்புகை பரிகாரம் கேட்கவில்லை என்றால் சரிதான்.

11. மேற்படி நடைபாதை பொது நடைபாதை என்று விளம்புகை பாரிகாரம் கேட்கவில்லை என்றால் சரியல்ல. பொது நடைபாதை என்றுதான் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளோம். நான் சொல்லிதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் நானும், தம்பி ஆறுமுகம் சேர்ந்துதான் வழக்கு விபரம் சொன்னோம். மேற்படி நான் சாட்சியமாக கூறிய விபரங்களைத்தான் வழக்கறிஞரிடம் சொன்னோம் என்றால் சரிதான். எனது சாட்சியத்தின் படியாக அ.வ.எண்.499/2009 பிராது வடிவமைக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

12. மேற்படி அ.வ.எண். 499/2009 ல் உள்ள சொத்து விபரம் தவறான சொத்து விபரம் என்றாலும் அதில் கேட்டுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தது அல்ல என்றாலும் சரியல்ல. அ.வ.எண். 383/2009 ல் எனக்கு ஆதரவாக தீர்ப்பு வரவேண்டும் என்பதற்காக அ.வ.எண். 499/2009 வழக்கில் தவறாக சட்சியம் அளித்து நிரூபணம் வாக்குமூலம் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. அ.வ.எண். 499/2009 சட்டப்படி தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)

முடிவடையும் நேரம்: 03.50 PM.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.01.27 10:37:52 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.